பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்
ந.க.எண்.39365/நிபி8/1/2019

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
இயக்ககம், சென்னை–600 006.
நாள்: 12.02.2020

பொருள்: நிர்வாகம் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – திரு.வி.சுகுமாரன் (த/பெ (அமரர்) திரு.ஆர்.விஜயன் – இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்து அரசாணை வழங்கப்பட்டுள்ளது – அரசாணை, அசல் சான்றிதழ்கள் மற்றும் பணிப்பதிவேடுகள் அனுப்புவது – தொடர்பாக.

பார்வை: 1) அரசு கடித (2ப) எண்.10 , மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் : 24.01.2020
2) அரசு கடித எண்.29097/ஏடி2/2019–2, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் : 29.01.2020

*****

பார்வையில் காணும் அரசாணை தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

பார்வை ஒன்றில் காணும் அரசு கடிதம் பத்தி மூன்றில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் இசைவினை முறையே அவற்றின் அ.சா.எண்.17178/க்யூ1/2019–1, நாள் 08.01.2020 மற்றும் அ.சா.எண்.1277/ஜி2/2020–1 நாள்:20.01.2020–இல் இசைவினைப் பெற்று வெளியிடப்பட்டுள்ளது

திரு.வி.சுகுமாரன், இளநிலை உதவியாளருக்கு சார்பு செய்யப்பட வேண்டிய அரசாணை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இதனை தனியருக்கு சார்பு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தனியரின் அசல் சான்றுகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகின்றன. பெற்றுக் கொண்டவுடன், ஒப்புகையினை உடன் அனுப்புமாறு இவ்வியக்கக அலுவலக நடைமுறை பிரிவு –1 கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்று வரிசை எண். 2400838 பதிவெண். 523131 மார்ச் 2002 மற்றும் 0489478 பதிவெண் 796141 மார்ச் 2003
2. மாற்றுச் சான்றிதழ்
3. சாதிச் சான்றிதழ் எண்.4436628
4. திரு.வி.சுகுமாரன் பணிப்பதிவேடு – 1 பவுண்ட்
5. இறந்த அரசு ஊழியர் திரு. விஜயன் பணிப்பதிவேடு –1 தொகுதி
6. அரசாணை இரண்டு நகல்கள்

ஒம்/.திருமதி.வி.ஷகிலா,
கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்).

பெறுநர்
இணை இயக்குநர் நலப்பணிகள், வேலூர் மாவட்டம்
நகல் :
திரு.வி.சுகுமாரன், இளநிலை உதவியாளர் – நலப்பணிகள் இணை இயக்குநர் மூலமாக
மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, அணைக்கட்டு, வேலூர் மாவட்டம்.
நிர்வாகப் பிரிவு –2 (இரு நகல்கள்)– இவ்வியக்ககம்
நிர்வாகப் பிரிவு 2 (முதுநிலை)–இவ்வியக்ககம்
இருப்புக்கோப்பு –1 / உபரி –1

//உண்மைநகல் // ஆணைப்படி // அனுப்பப்படுகிறது //

கண்காணிப்பாளர்.

006008

## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.வி.சுகுமாரன் (த/பெ. (லேட்) ஆர்.விஜயன்) இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை**

அரசாணை (2ப) எண்.10

நாள் : 24.01.2020
திருவள்ளுவர் ஆண்டு 2051
விகாரி, தை – 10

படிக்க :–

1. அரசு கடித எண்.990/ஏடி2/2018–3, மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத் துறை, நாள். 04.07.2018.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018.
3. மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித ந.க.எண்.39365/நிபி8/1/2019, நாள். 30.07.2019.

– – – – –

**ஆணை:**

பார்வை மூன்றில் படிக்கப்பட்ட மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களின் கடிதத்தில், வேலூர் மாவட்டம், குடியாத்தம் அரசு மருத்துவமனையில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது திரு.ஆர்.விஜயன், என்பவர் 26.08.2001–ல் பணியிடையே மரணமடைந்தார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 15.07.1959 என்றும், அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.07.2019 என்றும் குறிப்பிட்டு, இறந்த அரசு ஊழியரின் மகன், திரு.வி.சுகுமாரன் என்பவர் தனக்குப் பணிநியமனம் வேண்டி 29.06.2006 அன்று விண்ணப்பித்திருந்தார் என்றும், தனியர் பிறந்த தேதி 22.05.1987 என்றும், திரு.வி.சுகுமாரன் என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்ததால், தனியரைத் தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி இளநிலை உதவியாளராக 22.10.2018 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் குறிப்பிட்டு, தனியர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 22.10.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை ஏற்று, திரு.வி.சுகுமாரன், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 22.10.2018 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை வெளியிடப்படுவதன் மூலம்

தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறையின் இசைவினை முறையே அவற்றின் அ.சா.எண்.17178/க்யூ1/2019–1, நாள்.08.01.2020 மற்றும் அ.சா.எண்.1277/ஜி2/2020–1, நாள்.20.01.2020–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்,
அரசு செயலாளர்.

பெறுநர்
✓மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–600 006.
திரு.வி.சுகுமாரன், இளநிலை உதவியாளர் (உரிய வழியாக)
மாநில கணக்காயர், சென்னை–600 018.
நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை,சென்னை–600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (தகவுப்பிரிவு) துறை, சென்னை- 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கே. இந்திரா
28/01/2020
பிரிவு அலுவலர்

24.01.20

118